අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கிறிஸ்தவம்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்

**கல்வி அமைச்சு**

| 15 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| கிறிஸ்தவம் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

**கிறிஸ்தவம் - I**

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

**பகுதி 1**

1. எசாயா இறைவாக்கினரின் முன்னுரைப்பின்படி குழந்தை இயேசு பிறந்த வழிமரபு
   (1)பெஞ்சமின் (2)தாவீது (3)யோசேப்பு (4)லேவி
2. திருமுழுக்கு யோவானின் பிறப்பை செக்கரியாவிற்பு முன்னறிவித்த வானதூதன்
   (1)காபிரியேல் (2)மிகாவேல் (3)லுசிபர் (4)ரபாயல்
3. யூத மத வழிபாடுகளில் தொழுகைக்கூடங்களில் பங்குபற்றுவதற்கு தொழில்நிமித்தம் வாய்ப்பு இல்லாதிருந்தவர்கள்
   (1)குருக்கள் (2)மீனவர் (3)விவசாயிகள் (4)இடையர்கள்
4. எருசலேம் கோவிலில் மரியாள் இயேசுவின் மீட்புத்தொகையாக செலுத்தியது செக்கேல் நிறைப்படி
   (1)மூன்று வெள்ளிக்காசு (2)நான்கு வெள்ளிக்காசு
   (3)ஐந்து வெள்ளிக்காசு (4)ஆறு வெள்ளிக்காசு
5. திருமுழுக்கு யோவான் மனமாற்றத்தின் வெளியார்ந்த அடையாளமாக மக்களுக்கு வழங்கியது
   (1)திருமுழுக்கு (2)திருவிருந்து (3)திருமணம் (4)குருத்துவம்
6. யூத மதத்தினதும் தேசியத்தினதும் மையமாக விளங்கிய இடம்
   (1)தொழுகைக்கூடம் (2)சினகொக்
   (3)எருசலேம் ஆலயம் (4)தலமைச்சங்கம்
7. இயேசுவால் தமது பணிக்காக பயிற்றப்பட்டு அனுப்பப்பட்டவர்கள்
   (1)திருத்தூதர் (2)திருத்தொண்டர்
   (3)மறைபரப்பாளர் (4)திருத்தந்தையர்

8. கிறிஸ்தவ வாழ்வு என்பது
(1)உலக அரசின் சட்டங்களுக்கு ஏற்ப கீழ்ப்படிந்து செயற்படல்
(2) இறையரசின் குண இயல்புகளை நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாட்டுடனான நம்பிக்கையாகும்
(3)தனிமனித செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல்
(4)உலகப் போக்கின்படி வாழுதல்

9. பழைய ஏற்பாட்டுகாலம் முதல் யூதமக்கள் இருபிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். தென்பகுதியில் வாழ்ந்தவர்கள் யூதர்கள் வடபகுதியில் வாழ்ந்தவர்கள்............
(1)எகிப்தியர் (2)உரோமையர் (3)பபிலோனியர் (4)சமாரியர்

10. வானதூதர்,உயிர்தெழுதல் போன்ற கருத்துக்களில் நம்பிக்கையற்ற சமயக்குழுவினர்
(1)பரிசேயர் (2)மறைநூல் அறிஞர் (3)சதுசேயர் (4)எசேனியர்

11. “என் விருப்பப்படியல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்” என்று இயேசு கூறியதன் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயம்
(1)கடவுளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்
(2)அலகையின் விருப்பத்திற்கு கீழ்ப்படிந்தார்
(3)தமது இயலாமையை வெளிப்படுத்தினார்
(4)உலக நியதிகளுக்கு கீழ்ப்படிந்தார்

12. இயேசுவின் மரணத்தின் போது எருசலேம் கோவிலின் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது இந்நிகழ்வு அடையாளப்படுத்துவது
(1)இயேசு உயிர்நீத்தார் என்பதாகும்
(2)அனைவருக்கும் இறை சமூகத்திற்கு செல்லும் வரம் கிடைக்கின்றது
(3)நீதியுடன் கூடிய சமூகம் உருவாகியமை
(4)இறையரசின் பணி முடிவடைந்தமை

13. பின்வரும் கூற்றுக்களை கருதுக
A-யூத தலைமைச்சங்க உறுப்பினர்
B-யூதரின் திட்டங்களுக்க இணக்கம் தெரிவிப்பவர்
C-இயேசுவின் உடலை அடக்கம் செய்தவர்
D-நேர்மையற்றவர்
மேற்படி அரிமத்தியா யோசேப்புடன் தொடர்புடைய கூற்றுக்களின் தொகுதி
(1)A,B, (2)B,C (3)C,D (4)A,C

14. உயிரோடு இருக்கும் இயேசுவை எமது வாழ்வில் அனுபவிக்க வேண்டுமாயின் நாம்..
(1)பாவத்திற்கு விலகி விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்
(2)ஒழுங்காக ஆலயம் செல்ல வேண்டும்
(3)தசம காணிக்கை செலுத்த வேண்டும்
(4)பிறர்நலப் பணிகளில் உற்சாகமாக பங்குகொள்ள வேண்டும்

15. தூய ஆவியினால் பூரணமாக்கப்படும் திருமுழுக்கை பெற்றுக்கொள்ளும் அனைவரும்
(1)இயேசுவுடன் மட்டும் எமது தனிப்பட்ட உறவை வளர்ப்போம்
(2)புதிய வாழ்வை ஏற்படுத்தும் ஒளிக்கு பயமின்றி சாட்சி பகர்வோம்
(3)இயேசுவை பற்றி ஓரளவு அறிந்து கொள்வோம்
(4)சமூகத்தில் பிரபல்யமாய் இருப்பார்கள்

16. "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக " என்ற இயேசுவின் இறைவார்த்தையில் முன்வைக்கப்படும் செய்தி
(1)சொந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்
(2)மகிழ்ச்சியான காரியங்களில் ஈடுபடல்
(3)கடவுளுக்கு அனைத்து காரியங்களிலும் முதலிடம் கொடுக்க வேண்டும்
(4) மகிழ்ச்சியான காரியங்களில் ஈடுபடல்

17. இயேசுவின் தோற்ற மாறுதலுடன் தொடர்புடைய சம்பவங்களாவன........
A-முகத்தோற்றம் மாறியது
B-வஸ்திரம் வெண்மையாக பிரகாசித்தது
C-இறைவாக்கினர் எலிசா,எலியா கலந்துரையாடினர்
D-தூய ஆவியானவர் புறாவின் வடிவில் இறங்கினார்
(1)A,B (2)B,D (3)B,C (4)A,C

18. இறையரசின் வளர்ச்சியை அனுபவிப்பதற்கு அத்தியவசியமற்றதாக அமைவது
(1)இயேசு அதிகாரத்திற்கு உட்படல்
(2)இயேசுவினுடைய நோக்கம் எங்களுக்குள்ளே இருத்தல்
(3)நேரம் கிடைக்கும் வேளையில் இறைவசனத்தை தியானித்தல்
(4)தொடர்ச்சியாக செபத்திலும் விசுவாசத்திலும் நிலைத்திருத்தல்

19. இயேசு கப்பர்நகூமில் செய்த அருளடையாளம்
(1)அசுத்த ஆவியை விரட்டுதல்
(2)பார்வையற்றவரை சுகப்படுத்தல்
(3)யாயீரின் மகளை உயிர்ப்பித்தல்
(4)நூற்றுவத்தலைவரின் பணியாளன் சுகம் பெறுதல்

20. உலகில் வாழும் அனைத்து மக்களும் இறையரசிலே மிகவும் பெறுமதியான சொத்து என்று கணிக்கப்படுவர். இதனை எடுத்துக்கூறும் உவமை.
(1)காணாமற்போன ஆடு (2)காணாமற்போன வெள்ளிக்காசு
(3)காணாமற்போன மகன் (4)திருமண விருந்து

21. இனத்தின் தந்தை எனும் சிறப்புப்பெயரை உடையவர்
(1)ஈசாக் (2)யாக்கோபு (3)ஆபிரகாம் (4)யோசேப்பு

22. மெசியாவில் விடுதலை பெறும் விசுவாசிகள் தம் வாழ்வில் வெளிப்படுத்தும் இறையரசின் பெறுமதி
(1)அநீதி (2)கோபம் (3)சண்டை (4)இறைபயம்

23. சேறு நிரம்பிய பாழுங்கிணற்றில் போடப்பட்ட இறைவாக்கினர்
(1)எசாயா (2)எரேமியா (3)ஆமோஸ் (4)மீக்கா

24. இறை அன்பிலிருந்து மனிதனை மாசுநிறைந்த நிலைக்கு இட்டுச்செல்லும் பண்பு
(1)தன்னலம் (2)அன்பு (3)பரிவு (4)இரக்கம்

25. "எவரும் என்னை ஆண்டவரே எனச்சொல்லாதீர்" தலைவர் பணியாளராக வேண்டும் என்பது இவரது பணியின் அடிப்படை
(1)அருட்தந்தை.திஸ்ஸபாலசூரிய (2)திருத்தந்தை இரண்டாம் யுவாம் பவுல்
(3)அருட்தந்தை.சந்திரா பர்ணாந்து (4)அருட்பணி.பீற்றர் ஜெராட் டீ சில்வா

26. மன்னிக்க மறுத்த பணியாளன் உவமையில் எமக்கு கிடைக்கும் முன் மாதிரி
(1)மன்னிப்பு வழங்குதல்-மன்னிப்பு பெறுதல் மூலம் புதுவாழ்வு கிடைத்ததது
(2)மன்னிப்பு வழங்க வேண்டிய தேவை இல்லை
(3)மன்னிப்பு வழங்குவது அனைவருக்கும் அவசியமற்றது
(4)மன்னிப்பு கேட்பது தவறு

27. பெருமைபாடுடைய விசுவாசிகளால் கட்டியெழுப்பப்பட்ட திருச்சபையின் தலையாக இருப்பவர்
(1)பேதுரு (2)ஸ்தேவான் (3)பவுல் (4)கிறிஸ்து

28. பெந்தகோஸ்து தினத்தில் திருமுழுக்கு பெற்று சபையில் இணைந்தவர்கள்
(1)2000 பேர் (2)3000 பேர் (3)4000பேர் (4)5000பேர்

29. ஆதித்திருச்சபையில் திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணமாய் அமைவது
(1)நற்செய்தி பணிக்கு ஆட்கள் போதாமை
(2)ஆதித்திருச்சபையின் சொத்துக்களை பராமரித்தல்
(3)கிரேக்க கைம்பெண்கள் அன்றாட பந்தியில் முறையாக கவனிக்கப்படுவதற்கு
(4)திருத்தூதர்களின் நற்செய்திப்பணிக்கு யூதர்கள் தடை ஏற்படுத்தியமை

30. ”வெள்ளியும் பொன்னும் எம்மிடமில்லை இருப்பினும் என்னிடம் உள்ளதை உனக்குத் தருகிறேன்….”என பேதுருவால் குறிப்பிடப்படும நபர்
(1)பிறவியிலே கால் ஊனமுற்ற மனிதன் (2)பார்வையற்றவர்
(3)தபித்தாள் (4)யுத்திகு எனும் இளைஞன்

31. பவுலின் வாழ்வின் தனிச்சிறப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன
A-பரிசேய மரபில் பிறந்தவர்
B-யூத ஆசிரியர் கமாலியேலிடம் கல்விகற்றவர்
C-தலை கீழாக சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்
D-கிரேக்க மொழியில் திறமை அற்றவர்
மேற்குறித்தவற்றில் பவுலுடன் தொடர்புடையவற்றை குறிப்பிடுக
(1)A,D (2)B,C (3)A,C (4)A,B

32. திருச்சபையினால் கூட்டப்பட்ட முதலாவது பொதுச்சங்கம்
(1)நிசேயா பொதுச்சங்கம் (2)எருசலேம் பொதுச்சங்கம்
(3)எபேசு பொதுச்சங்கம் (4)கல்சடோன் பொதுச்சங்கம்

33. பவுல் கொரிந்தில் தமது பொருளாதார தேவையை நிறைவேற்றிய விதம்
(1)கூடாரம் அமைத்தல் (2)மந்தை மேய்த்தல்
(3)மீன் பிடித்தல் (4)கட்டடிம் கட்டுதல்

34. மனிதக்கையால் செய்யப்பட்டவை தெய்வங்கள் அல்ல என்ற பவுலின் போதனையின் பிரதிபலனாக அமைவது
(1)கையால் செய்யப்பட்ட சிலைகள் அர்த்தமுடையவை
(2)சிலை வழிபாட்டில் நம்பிக்கை கொண்டமக்களை ஊக்குவித்தல்
(3)ஒரே கடவுளை வழிபடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்
(4)சிலை வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்தனர்

35. பவுல் உரோமைக்கு கைதியாக செல்லும் போது உடன் பணியாளராக சென்றவர்கள்
(1)லூக்கா,தீமோத்தேயு (2)லூக்கா, அரிஸ்தர்கு
(3)அப்பொல்லோ, அக்கில்லா (4)தீத்து, லூக்கா

36. "மறுபடியும் பிறத்தல் அன்றி" என்பதிலிருந்து வெளிப்படும் செய்தி
(1)ஆடம்பர வாழ்க்கை (2)திருமணத்தின் பின்னரான வாழ்வு
(3) தூய ஆவியின் வாழ்வு (4)சிற்றின்ப வாழ்வு

37. திருவிவிலியத்தில் உயிருள்ள யாவற்றுக்கும் தாய் எனப்பொருள் தரும் வகையில் குறிப்பிடப்படும் நபர்
(1)ஏவாள் (2)எலிசபெத் (3)மரியாள் (4)றெபேக்கா

38. இறைவன் கிறிஸ்தவராகிய எம்மை அழைத்ததன் நோக்கம்
(1)உலக அரசு சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு
(2)தனிமனித சுதந்திரத்தை பேணுதல்
(3)உலகில் இயேசுவின் சார்பில் செயற்பாடுகளை நிறைவேற்றல்
(4)அதிகாரிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் சேவை செய்தல்

39. ஊனியல்பின் செயற்பாடுகளாக அமைவது
(1)களியாட்டம், மகிழ்ச்சி (2)குடிவெறி, களியாட்டம்
(3)பரத்தமை, அன்பு (4)சண்டை, இரக்கம்

40. கிறிஸ்தவர்களாகிய நாம் இன்றைய சமூகத்தின் நிலைப்பாட்டை மாற்ற செயற்பட வேண்டிய விதம்
(1)மனிதத்துவத்தை விட சட்டத்திற்கு முன்னுரிமை அளித்தல்
(2)வசதி படைத்தவர்களை கனம் பண்ணுதல்
(3)உலகியல் சார்ந்த அனைத்துக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளல்
(4)உளரீதியாகவும், ஆன்மீகரீதியாகவும் துன்புற்ற மக்களுக்கு ஆறுதல் அளித்தல்

புள்ளிகள் (1 x 40=40)

# பகுதி II

முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

*(1)*

1)இயேசுவின் பிறப்பினை முன்னறிவித்த இறைவாக்கினர்கள் இருவரின் பெயர்களை தருக?

2)மெசியாவின் வருகைக்காக எருசலேமில் காத்திருந்த இறைவாக்கினர் சிமியோனிடம் காணப்பட்ட இரு பண்புகளைத் தருக?

3)உயிர்த்தெழுந்த இயேசு காட்சி கொடுத்த சம்பவங்கள் இரண்டு எழுதுக?

4)உலகப்பிரகாரமான சொத்துக்கு கவலைப்படாமல் நீதியை சேகரித்து கொள்ளுதல் தொடர்பாக இயேசு கூறிய உவமைகள் இரண்டு தருக?

5)இயேசுவினுடைய இவ்வுலகப் பணிவாழ்வின் போது இறை வேண்டலில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

6)இன்றைய காலத்தில் திருச்சபைகளின் ஒன்றிணைப்பிற்காக முயற்சி செய்யும் நிறுவனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

7)கூட்டுத்தலைமத்துவப் பணியில் லிஸ்திரா எனற இடத்தில் பவுல், பர்னபா ஆகியோருக்கு வழங்கிய கிரேக்கப்பெயர்கள் எவை?

8)மது அருந்துதலால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி நீதிமொழிகள் நூலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இரண்டு தருக?

9)இறைவாக்கினர் ஆமோசின் இறைவாக்குப்பகுதியினை பூர்த்தி செய்க?

நீதி வெள்ளமெனப்……………….

நேர்மை வற்றாத ஆறாக…………..

10)இறைவாக்கினர் மீக்கா சுபீட்சத்தின் அடையாளங்களாக குறிப்பிடும் இரு உருவகங்கள் எவை?

புள்ளிகள் (2x10=20)

2)இஸ்ரேல் மக்கள் மத்தியில் இறைவாக்குப்பணி

1) இறைவாக்கினர் என்போர் யார்?

2)இயேசு நாசரேத்து செபகூடத்தில் வாசித்த இறைவார்த்தைகளை எழுதுக?

3)இயேசுவின் நாசரேத்து அறிக்கை மூலம் இன்றைய சமூகத்திற்கு கிடைக்கும் எதிர்பார்ப்புக்கள் ஐந்தினை விளக்குக?

புள்ளிகள் (2+3+5=10)

3)”இயேசு தமது பணிகளை ஆரம்பிக்கும் வேளையில் பலஸ்தீன நாட்டு மக்கள் அதிக துன்பங்களை அனுபவித்தனர்”

1)பரிசேய சமயக்குழுவினரிடம் காணப்பட்ட பண்புகள் இரண்டு தருக?

2)யூத நீதி மன்றத்தினால் பிலாத்து முன்னிலையில் இயேசுவிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மூன்று தருக?

3)உமது வாழ்வில் நீர் எதிர்கொண்ட சோதனை ஒன்றினை குறிப்பிட்டு அதனை வெற்றி பெறுவதற்கு பின்பற்றக்கூடிய வழிமுறைகள் நான்கினை குறிப்பிடுக?

புள்ளிகள் 2+3+5=10

4)”இயேசுவின் போதனையின் பிரதான கருத்து இறையரசு”

1)இறையரசு என்றால் என்ன?

2)கடுகு விதை, புளித்தமாவு, விதைப்பவன் உவமை மூலம் முன் வைக்கப்படும் பிரதான படிப்பினைகள் மூன்றினைத் தருக?

3)உமது வாழ்வில் அற்புதங்களை அனுபவிப்பதற்கு உம்மில் வளர வேண்டிய குண இயல்புகள் ஐந்தினை எழுதுக?

புள்ளிகள் 2+3+5=10

5)”மெசியா மூலம் கிடைக்கும் முழுமையான வாழ்வு”

1)பழைய ஏற்பாட்டில் அருட்பொழிவு செய்யப்பட்ட இரு கூட்டத்தினரை தருக?

2)நல்லாயனின் பண்புகள் மூன்று தருக?

3)கிறிஸ்தவர்களாக நாம் ஏனைய மக்களுடன் ஒற்றுமையுடன் செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்தினை விளக்குக?

புள்ளிகள் 2+3+5=10

6) “திருச்சபையானது இறைமக்களின் கூட்டம்”

1)ஆதித்திருச்சபையினரின் ஆன்மீக வாழ்வில் காணப்பட்ட பண்புகள் இரண்டு தருக?

2)பவுலின் தூதுரைப்பயணங்கள் வெற்றியடைய சாதகமாய் அமைந்த காரணிகள் மூன்று தருக?

3)பவுலின் மனமாற்ற அனுபவத்தினூடாக இன்று கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகள் ஐந்தினை விளக்குக?

புள்ளிகள் 2+3+5=10

7)பின்வரும் தலைப்புக்களில் இரண்டினை தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக? தரப்பட்ட வழிகாட்டற்குறிப்புக்களை அடிப்படையாக கொள்க.

1)உலக ரீதியான ஏழ்மை நிலை

-ஏழைகளுக்கு பெலனாக இருப்பது

-சோர்வடையாமற் செயற்படுவது

-வளங்கள் முறையாக பகிரப்படுதல்

-ஒழுக்க நெறிக்குட்பட்ட சமூகக்கட்டமைப்பு

-உறுதியான வாழ்விற்கான கொள்கைகளை ஏற்படுத்தல்

2)கிறிஸ்தவ குடும்பம்

-குடும்பத்தின் படைப்பாளர் இறைவன்

-கிறிஸ்தவ குடும்பத்தில் கணவனின் கடமைகள்

-மனைவியின் கடமைகள்

-பிள்ளையின் கடமைகள்

-சமூகத்தில் எமது கடமைகள்

3)திருமுழுக்கு யோவானின் முன்னோடிப்பணி

-பணியின் நோக்கம்

-பொது மக்களுக்கான அறிவுரை

-அரச பணியில் ஈடுபட்டிருந்தவருக்கான அறிவுரை

-உரோமைப்படை வீரருக்கான அறிவுரை

-யூத மதத்தவருக்கான போதனை

4)இறையரசின் அடையாளங்கள்ஃஅற்புதங்கள்

-அற்புதங்கள் தொடர்பான அறிமுகம்

-குணமளித்தல் சம்பவம்

-அசுத்த ஆவியை விரட்டுதல்

-இயற்கைக்கு மேலான வல்லமை

-மரித்தோர் உயிர் பெறுதல்